தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

<u>முன்னிலை</u> : திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**<u>ஆணை எண். 47/மா/2024</u>**

**<u>நாள். 06.08.2024</u>**

திருவாளர்கள் R.குருவம்மாள் மற்றும் 12 நபர்கள் – முறையீட்டு மனுதாரர்கள்

திருவாளர்கள் S.துரை மற்றும் 3 நபர்கள் – எதிர்மனுதாரர்கள்

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, சிங்கார தோட்டம், 2வது தெரு, கதவு எண்.14 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. R.குருவம்மாள் மற்றும் 12 நபர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.04.2024 அன்று பெறப்பட்டு 47/மா/2024 என எண்ணிட்ட முறையிட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த திருவாளர்கள் R.குருவம்மாள் மற்றும் 12 நபர்கள், தங்களுடைய மனுவில் (நாள் இல்லை) சக்கரை நாடார், 2) அமராவதி 3) ராஜேஸ்வரி 4) தனபாக்கியம் ஆகியோர் அய்யாவு நாடாரின் வாரிசுகள் என்றும் அய்யாவு நாடார் மற்றும் அவரது நான்கு வாரிசுகள் 1893 சதுர அடியை யாருக்கும் எழுதி கொடுக்காத நிலையில், திரு சக்கரை நாடார் மகன் துரை அய்யாவு நாடாரின் வாரிசுகளை மறைத்து, 2010ஆம் ஆண்டு அவரின் மூன்று மகன்கள், ஜெகதீசன், மனோசங்கர், ஸ்ரீனிவாசன் பெயரில் பத்திரபதிவு செய்து அந்த பத்திர பதிவை வைத்து அய்யாவு நாடாரின் மூன்று வாரிசு சான்றிதழ்களை சமர்ப்பிக்காமல், மாநகராட்சி அலுவலர்களின் துணையுடன் அய்யாவு நாடார் பெயரில் இருந்த சொத்துவரி பெயர் மாற்றம் செய்து கட்டிட அனுமதி பெற்றுள்ளனர் என்று தெரிவித்து அச்சொத்தை தங்களுக்கு மீட்டு தருமாறு கோரியுள்ளனர். மனுதாரரின் முறையிட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

மனுதாரர்கள் தங்களுடைய மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, <u>சென்னை மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு எண்.4607/2023 நிலுவையில் உள்ளதாக சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.</u>

2) இம் மாதிரியான நிகழ்வுகளின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் சட்டம் 2015–பிரிவு 10 (3) ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to :-

(a) xxx

(b) any matter in respect of which enquiry has been ordered under the commission of inquires Act 1952 or any matter pending before a court.

(c) xxx

எனவே, மேற்கண்ட சட்ட பிரிவின் கீழ் தங்களின் மனு (நாள் இல்லை). மீது விசாரணை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என்று இம்முறை மன்றம் கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
திருவாளர்கள் R.குருவம்மாள் மற்றும்
12 நபர்கள், எண்.14, சிங்கார தோட்டம் 2வது தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–600 021.

நகல் – இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.